ஒன்ராறியோ மீளாய்வுச் சபை
**(ORB)**

**நோயாளர்களுக்கும் குடும்பங்களுக்கும்**

**ஒரு தகவல் கையேடு**

# <u>பொருளடக்கம்</u>

1. **தடயவியல், குற்றவியலின்படி பொறுப்பில்லை (NCR), தகுதியற்றவா் (Unfit) என்பவனற்றின் வரைவிலக்கணங்கள்** பக்கம்3

2. **ஒன்ராறியோ மீளாய்வுச் சபை (ORB)** பக்கம்4
- மீளாய்வுக் குழுவின் உள்ளடக்கம்
- தலைவரின் அதிகாரங்கள்

3. **ஒன்ராறியோ மீளாய்வுச்சபைச்செயல்முறைகள்** பக்கம்4

4. **சபையின் தீா்ப்புக்கள்** பக்கம் 8
- தடுப்புக்காவல் உத்தரவு
- நிபந்தனையுடன்கூடிய வெளியேற்றல்
- முழுமையான வெளியேற்றல்
- உச்ச ஆபத்து பெயா்க்குறிப்பீடு
- எனக்கெதிராக ஒரு குற்றப்பதிவு உள்ளதா?

5. **நிபந்தனை/சிறப்புரிமை அங்கீகரித்தல் படிமுறை** பக்கம்9
- ஒன்ராறியோ மீளாய்வுச் சபை நிபந்தனைக் கோரிக்கைகள்
- நிபந்தனை இடா் மதிப்பீடு
- பயண ஒழுங்குகள்
- நிகழ்வுக் குறிப்பேடு

6. **சிகிச்சை அணியின் பங்கு** பக்கம்14

7. **மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்படல்** பக்கம்16
- மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான படிமுறைகள்

8. **வரைவிலக்கணங்கள்** பக்கம்18

March 2015

1. **தடயவியல்**

மனநல சுகாதாரத்தில் ‘‘தடயவியல்’’ என்பது சட்ட விதிமுறைகளும் மனநல முறைமையும் ஒன்றுக்கொன்று தொடர்புபடும்போது ஏற்படும் ஒரு சூழ்நிலையை விபரிப்பதற்குப் பொதுவாக உபயோகிக்கப்படும் ஒரு பதமாகும். தீவிர மனநோய் ஒன்றினால் பாதிக்கப்பட்ட தனிநபர் ஒருவர் கனடா குற்றவியல் குறியீட்டில் வரையறுக்கப்பட்ட ஒரு குற்றத்தைப் புரிந்ததன் காரணமாகச் சட்டத்துடன் தொடர்புபடும்போது இது ஏற்படும். இழைக்கப்பட்ட குற்றத்திற்காக அத் தனிநபர் சட்டபூர்வமாகப் பொறுப்புடையவராகவும் விளக்கம் கூறவேண்டியவராகவும் இருக்கின்றாரா என்பதைப் பற்றி நீதிமன்றங்கள் ஒரு தீர்மானம் எடுக்கும்.

### NCR என்றால் என்ன?

**குற்றவியலின்படி பொறுப்பு இல்லை (NCR)** என்பது குற்றம்சாட்டப்பட்டவர் ஒரு செயலைச் செய்தார் அல்லது செய்யாதிருந்தார் ஆனால் அந்த நேரத்தில் அப்படிச் செய்ததன் அல்லது செய்யாதிருப்பதன் இயல்பையோ தரத்தையோ அல்லது அப்படிச் செய்வதோ செய்யாதிருப்பதோ பிழையென்று தெரிந்துகொள்ளும் தன்மையை இல்லாமற் செய்த ஒரு மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்ற ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பாகும். ‘‘குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் புரிந்தார் எனினும் மனநோய் காரணமாக, குற்றவியலின்படி, குற்றத்திற்குப் பொறுப்புக் கூறவேண்டியதில்லை’’ என்று குறிப்பிடுகின்றது நீதிமன்றத் தீர்ப்பு. இந்த முடிவை ஒரு உளநல மருத்துவர் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைப்பார். ஆனால் நீதிபதிதான் இறுதித் தீர்மானத்தை எடுப்பார்.

நீதிமன்றத்தால் நீங்கள் ‘‘குற்றவியலின்படி பொறுப்பு இல்லை’’**(NCR)** என்று காணப்பட்டதும் ஒரு மனநல சுகாதார வசதியில் அமைந்துள்ள தடயவியல் பகுதியொன்றில் வசிக்குமாறு உத்தரவிடப்படலாம். தடயவியல் பகுதிகள் மூன்று பாதுகாப்பு நிலைகளில் பிரிக்கப்பட்டுள்ளன: அதியுயர் பாதுகாப்பு, தடயவியல் பாதுகாப்பு, பொதுத் தடயவியல் பாதுகாப்பு. ஒன்ராறியோ மாகாணத்தில் ஒரேயொரு அதியுயர் பாதுகாப்பு வசதி Penetanguishene மனநல மையம் (PenetanguisheneMentalHealthCentre) ஓக் றிட்ஜ் பகுதியில் அமைந்துள்ளது. Ontario Shores மனநல அறிவியல் மையம் (Ontario ShoresCentre forMentalHealthSciences) பொது தடயவியல் **(FPRU/FTU/FCRU**), பாதுகாப்புத் தடயவியல் (**FAU/FARU/FRU**) ஆகிய இரு சேவைகளையும் கொண்டுள்ளது.

உங்களுக்கு ஒரு **NCR** தீர்ப்புக் கிடைத்ததும் நீங்கள் ஒன்ராறியோ மாகாணத்தின் அனைத்துத் தடயவியல் நோயாளர்கள் மீதும் சட்ட அதிகாரம் கொண்டுள்ள ஒன்ராறியோ மீளாய்வுச் சபைக்குப் (ORB) பரிந்துரைக்கப்படுவீர்கள். நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்காதிருந்தால் 45 நாட்களுக்குள்ளும், நீதிமன்றம ஒரு தீர்ப்பை வழங்கியிருந்தால் 90 நாட்களுக்குள்ளும் ORB ஒரு ஆரம்ப விசாரணையை அட்டவணைப்படுத்தும்.

### தகுதியற்றவர் (Unfit) என்றால் என்ன?

நீதிமன்ற நடவடிக்கைகளின் இயல்பு அல்லது விளைவுகள் பற்றிய புரிதல் உங்களுக்கு இல்லாமல் நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற முன்னர் அல்லது நடைபெறும்போது ஒரு வழக்கறிஞரை ஒழுங்குசெய்ய முடியாதிருப்பதுடன் ஒரு மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் **‘‘நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்படத் தகுதியற்றவர்’’** என நீதிமன்றம் தீர்ப்பளிக்கக்கூடும்.நீங்கள் ஒரு மனநல வசதிக்கு உத்தரவிடப்படுவதுடன் 45 நாட்களுக்குள் உங்களுக்கு ஒரு ஆரம்ப விசாரணை நடைபெறும்.

## 2. ஒன்ராறியோ மீளாய்வுச் சபை (ORB)

ORB உங்களது சூழ்நிலைகளை ஆகக்குறைந்தது வருடமொன்றுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யும். இச்சபை மனநோய் காரணமாகக் குற்றவியலின்படி பொறுப்பில்லை (NCR) அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்படத் தகுதியற்றவர் எனக் காணப்பட்டவர்களுக்கான தீர்ப்புகளை மீளாய்வு செய்து முடிவெடுக்கின்றது. சபை உறுப்பினர்கள் Ontario Lieutenant Governor in Council ஆல் நியமிக்கப்படுகின்றனர்.

<u>**மீளாய்வுக் குழுவின் உள்ளடக்கம்**</u>

நீதிபதிகள், வழக்கறிஞர்கள், உளநல மருத்துவர்கள், உளவியல் அறிஞர்கள் மற்றும் மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவர். ஒன்ராறியோ மீளாய்வுச் சபைக்கு ஒரு தலைவர் இருக்கின்றார். அனைத்து ORB விசாரணைகளும் ஒரு குழுவை உள்ளடக்கும். ஒவ்வொரு குழுவிலும் ஒரு மாற்றுத் தலைவர் (வழமையாக ஒரு நீதிபதி அல்லது நீதிபதியின் மத்திய அரசு நியமனத்துக்குத் தகுதிவாய்ந்த ஒரு சட்ட நபர்), ஒரு உளநல மருத்துவர், ஒரு ஒன்ராறியோ மாகாண சட்டபீட உறுப்பினரான ஒரு சட்ட நபர் ஆகியோர் உள்ளடங்குவர். சபையில் பொதுவாக 5 உறுப்பினர்கள் உள்ளனர். குறைந்தது 3 உறுப்பினர்கள் தேவைப்படுகின்றனர். மாற்றுத் தலைவர் சாட்சிகளை அழைத்து சத்தியப்பிரமாணத்தின் கீழ் சான்று வழங்குமாறும் ஆவணங்களை முன்வைக்குமாறும் கட்டளையிடலாம். மாற்றுத் தலைவர் அத்துடன் சான்றிதழ்களை மீளாய்வுசெய்து தீர்வையும் தீர்வுக்கான காரணங்களையும் முன்வைப்பார்.

### 3. ஒன்ராறியோ மீளாய்வுச் சபைச் செயல்முறைகள்

சபை உறுப்பினர்கள் உங்கள் சூழ்நிலைகளை மீளாய்வு செய்யும்போது ஒரு விசாரணை நடாத்துவார்கள். இந்த விசாரணை பொதுவாக ஒரு நீதிமன்ற விசாரணையை விடக் கூடியபட்சம் சம்பிரதாயப்படி இல்லாமலும், குறைந்தபட்சம் எதிர்வாதமுடையதாகவும் இருக்கும். விசாரணையின்போது ORB உறுப்பினர்களும் அவர்களைவிட மேலதிகமாக இருப்பவர்கள்:

- உள்ளூர் சட்டமா அதிபர் அலுவலகத்திலிருந்து ஒரு அரச வழக்கறிஞர்;
- நீங்களும் உங்கள் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்கள் வழக்கறிஞரும்;
- உங்கள் உளநல மருத்துவர்;
- மருத்துவமனை சட்ட ஆலோசகர்; மற்றும்
- ஒரு நீதிமன்ற அறிக்கையாளர்

நீங்களும் உங்கள் வழக்கறிஞரும் அரச வழக்கறிஞர் மற்றும் மருத்துவமனைப் பிரதிநிதி ஆகியோர் உத்தியோகபூர்வ ''தரப்பினர்'' ஆவர்.

ஒரு விசாரணைக்கு முன்னதாக, **ஒன்ராறியோமீளாய்வு சபைக்கான மருத்துவமனை அறிக்கை** என அழைக்கப்படும் ஒரு ஆவணம் சபைக்குக் கிடைக்கப்பெறும். இந்த அறிக்கை உங்கள் நோயாளர் பராமரிப்புப் பிரிவிலுள்ள பல்துறை நிபுணத்துவக் குழுவினால்தயாரிக்கப்படுகின்றது. இந்த அறிக்கையில் குற்ற அட்டவணை, ஏதாவது முன்னைய குற்றச்சாட்டுக்கள், மருத்துமனையில் தங்குதல்கள், உங்கள் தற்போதைய சிகிச்சைத் திட்டம், அத் திட்டதத்துக்கு சமூகத்தில் அல்லது மருத்துவமனையில் உங்கள் நடத்தை போன்ற உங்கள் எதிர்வினை ஆகியவற்றை உள்ளடக்கும். சிகிச்சை அணி அடுத்த ஆண்டுக்கான நிபந்தனைகளுடன்கூடிய ஒரு தீர்ப்பை மீளாய்வு சபைக்குப் பரிந்துரைக்கும்.

சிகிச்சை அணி சபைக்குத் தனது பரிந்துரையை வழங்கும்போது பின்வருனவற்றைக் கருத்திற்கொள்ளும்: (1) பொதுமக்களின் பாதுகாப்பு (2) உங்கள் மனநிலை (3) சமூகத்துடன் மீண்டும் நீங்கள் இணைதல் (4) உங்களுக்கு வேண்டிய தேவைகள் (5) எந்தத் தீர்ப்பு அவசியமானது மற்றும் பொருத்தமானது


ஒன்ராறியோ
மீளாய்வுச்
சபைக்கான
மருத்துவமனை

சிகிச்சை அணி உங்களை அணுகி நீங்கள் சபையிடம் எதைக் கோருகின்றீர்கள் என வினவும். கீழ்வரும் எந்தக் குறிப்பிபட்ட நிபந்தனைகளையும் நீங்கள் கோரலாம்: மருத்துவமனைக்கு வெளியே **நேரடிக் கண்காணிப்பில் இருத்தல்** (ஒரு ஊழியர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபருடன்) அல்லது **மறைமுகக் கண்காணிப்பில் இருத்தல்** (முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட பயண ஒழுங்கொன்றுடன் நீங்களாகவே வெளியே இருப்பது) மருத்துவமனையிலிருந்து நீங்கள் பயணம்செய்ய விரும்பும் தூரம் (உதாரணமாக, குறிப்பிட்ட நகரில் உறவினர்களிடம் சென்றுவர) ஒரு சமூக அனுமதிப்பத்திரத்தில் நீங்கள் வெளியே இருக்கக்கூடிய கால அளவு (உதாரணமாக, ஒரு வாரம் வரை) அத்துடன் அடுத்த வருடம் சிறிது காலம் சமூகத்தில் உங்களால் வாழக்கூடியதாக இருக்குமா என்பது. நீங்கள் சபையிடமிருந்து ஒரு நிபந்தனையுடன் கூடிய அல்லது முழுமையான வெளியேற்றலுக்குக் கோரிக்கை செய்யலாம். உங்கள் கோரிக்கைகள் பொதுவாக உங்கள் வழக்கறிஞருடன் கலந்தாலோசிக்கப்படும். உங்கள் கோரிக்கைகள் ஒன்ராறியோ மீளாள்வு சபைக்கான மருத்துவமனை அறிக்கையில் குறிப்பிடப்படும். உங்களுக்கும் உங்கள் வழக்கறிஞருக்கும் இந்த அறிக்கையின் பிரதியொன்று விசாரணக்கு முன்னர் கிடைக்கப்பெறும்.

எல்லா விசாரணைகளிலும் பொதுமக்கள் கலந்துகொள்ளலாம். ஆகவே உங்கள் குடும்பமும் விசாரணையில் கலந்துகொள்ளலாம். ஆனால், அவர்கள் எவரும் மருத்துவமனையினாலோ, அரச அல்லது உங்களது வழக்கறிஞராலோ ஒரு சாட்சியாக அழைக்கப்பட்டாலேயன்றி அங்கு கதைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். நீங்கள் உங்கள் வழக்கறிஞரால் ஒரு சாட்சியாக அழைக்கப்பட்டாலே தவிர சபையுடன் நேரடியாகக் கதைப்பதற்கோ அல்லது ஒரு கேள்விக்குப் பதிலளிக்கவோ முடியாது. இந்த விசாரணையில் உங்கள் கடந்தகாலக் குற்ற வரலாறு கலந்துரையாடப்படக்கூடும் என்பதை அறிந்திருங்கள்.

ஆங்கிலம் உங்கள் முதல் மொழியாக இல்லாமல் இருப்பதுடன் உங்களுக்கு ஒரு உரைபெயர்ப்பாளர் தேவைப்படின், நீங்கள் கோரிக்கை செய்யும் பட்சத்தில் சபை இந்தச் சேவையை ஒழுங்குசெய்யும்.

விசாரணையைத் தொடர்ந்து, ORB குழு ஒரு **தீர்ப்பைத்** தயாரிக்கும். இத்தீர்ப்பு, உங்களது அடுத்த வருடாந்த விசாரணை இடம்பெறும்வரை அல்லது அதைவிட முன்னராக ஒரு விசாரணை அட்டவணைப்படுத்தப்பட்டாலேயன்றி உங்கள் சுதந்திரத்தின் வரம்புகளை ஆணையிட்டுக் கூறும். விசாரணையின் சில வாரங்களுக்குள் ஒரு எழுத்துமூலமான பிரதியை ORB விநியோகிக்கும்.



**உங்களுக்கு வழமையாக ஒரு வருடத்தில் ஒரு விசாரணை மட்டுமே இருக்கும் என்பதை அறிந்திருக்கவேண்டியது முக்கியமாகும்.** ஒவ்வொரு விசாரணையின்போதும் சபை வழங்கும் தீர்ப்பு அடுத்த விசாரணை வரை உங்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் பற்றி விபரிக்கும். உங்களுக்கு ஒரு முழுமையான வெளியேற்றல் கிடைக்கும்வரை, ORB விசாரணைகள் தொடர்ந்தும் வருடமொன்றுக்குக் குறைந்தது ஒரு தடவை கிடைக்கும்.

குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில், உங்களுக்கு ஒரு முன்கூட்டிய விசாரணை கிடைக்கக்கூடும். உதாரணமாக, உங்களுடைய தீர்ப்பின் நிபந்தனைகளில் முழுப்பயனையும் நீங்கள் பெற்றுக்கொண்டதுடன் உங்களது புனர்வாழ்வுக்கும் சமூகத்தில் நீங்கள் மீண்டும் இணைந்துகொள்வதற்கும் மேலதிக நிபந்தனைகள் பயன்படும்போது இவை கோரப்படலாம். உங்களது கோரிக்கை பற்றி உங்கள் சிகிச்சை அணியிடம் கதைப்பது வழமையான நடைமுறை ஆகும். நீங்கள் தீர்ப்பின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாமல் இருந்திருப்பது, முன்கூட்டிய விசாரணைக்கான மற்றுமொரு சூழ்நிலை ஆகும். சில நிபந்தனைகள் மாற்றப்படவேண்டுமா என்பதைக் கண்டறிவதற்காக இந்த அணி அதை மீளாய்வு செய்யக்கூடும்.

சிகிச்சை அணியின் சார்பில், உங்கள் உளநல மருத்துவர், மருத்துவமனையின் பொறுப்பான நபரிடம் (அல்லது பிரதிநிதியிடம்) முன்கூட்டிய விசாரணைக்காக ஒரு பரிந்துரை வழங்குவார். சிகிச்சை அணியின் பரிந்துரையைப் பொறுப்பான நபர் (அல்லது பிரதிநிதி) அங்கீகரித்தால், ஒரு முன்கூட்டிய விசாரணைக்கான கோரிக்கை ORB க்கு சமர்ப்பிக்கப்படும். உங்கள் சார்பாக நீங்கள், உங்கள் குடும்பம், அல்லது வழக்கறிஞர் ஒரு முன்கூட்டிய விசாரணைக்காக ORB க்கு விண்ணப்பிக்கலாம். கோரிக்கையை ORB ஏற்றுக்கொண்டால் ஒரு முன்கூட்டிய விசாரணைக்கு ஒரு திகதியை அவர்கள் ஒழுங்குசெய்வார்கள்.

**மேல் முறையீடுகள்:**
மீளாய்வு சபை வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, தீர்ப்பும் தீர்ப்புக்கான காரணங்களும் கிடைக்கப்பெற்றபின் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் முறையீடு செய்யலாம்.

**மேல் முறையீடுகள் செய்வதற்கு எனக்கு என்ன தேவை?**
ORB இன் தீர்ப்புக் கட்டளையும் (தீர்மானம்) தீர்ப்புக்கான காரணங்களும். இவை ORB இடமிருந்து உங்களுக்குக் கிடைக்கும் இரண்டு வெவ்வேறு ஆவணங்கள் ஆகும். வழமையாக விசாரணையின் பின்னர் இரண்டு நாட்களிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் தீர்ப்பு வழங்கப்படும், அத்துடன் உங்களுக்கு ஒரு தடுப்புக்காவல் உத்தரவு, முழுமையான வெளியேற்றல் அல்லது நிபந்தனையுடன் கூடிய வெளியேற்றல் வழங்குவது ORB இன் உத்தரவுதான். தீர்மானத்துக்கான காரணங்கள் ORB இன் தீர்மானத்துக்கு ஒரு விளக்கமளிக்கின்றன, அத்துடன் சில நேரங்களில் காரணங்களைப் பெற்றுக்கொள்ள சில மாதங்கள் எடுக்கக்கூடும்.

படிவம் E, ‘‘மேல் முறையீட்டு அறிவிப்பு’’ ஐ ORB, மேல் முறையீட்டு நீதிமன்றம், மருத்துவமனைக்குப் பொறுப்பானவர் அல்லது நோயாளியின் வழக்கறிஞரிடமிருந்து கோர முடியும். உங்களிடம் கேள்விகள் இருந்தால், உங்கள் உள்ளூர் நோயாளர் வழக்கறிஞர் அல்லது உங்கள் சட்ட ஆலோசகரை நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

**உரிமைகள் கட்டுப்பாட்டு விசாரணை என்றால் என்ன?**
ORB க்கு மருத்துவமனையிலிருந்து உங்கள் உரிமைகள் கணிசமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிப்புக் கிடைக்கும்போது,‘‘சிறப்பு’’ விசாரணை என்றும் அழைக்கப்படும் உரிமைகள் கட்டுப்பாட்டு விசாரணை நடைபெறும். உங்கள் உரிமைகள் எந்த நேரத்திலும் 7 நாட்களுக்கு மேல் குறிப்பிடத்தக்களவில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் மருத்துவமனை அதை ORB க்கு அறிவிக்கவேண்டும்.

உரிமைகள் கணிசமாகக் கட்டுப்படுத்தப்படுதலை எது உருவாக்குகின்றது என்பதை அறிய ஒரு சீரான வரையளவு இல்லை. உங்கள் உரிமைகளுக்குக் குறிப்பிடத்தக்களவு தடை ஏற்பட்டுள்ளது என ORB க்கு அறிவிக்கவேண்டிய சூழ்நிலைகள் பற்றி மருத்துவமனைகளுக்கு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம்.

சமூகத்தில் வாழ்ந்து வரும்போது நீங்கள் மீண்டும் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படுவது, குறிப்பிடத்தக்க உரிமைகள் கட்டுப்பாட்டு விசாரணை ஒன்றைத் தூண்டிவிடுவதற்கு ஒரு உதாரணமாகும். ஒரு மருத்துவமனையில் அதிகுறைந்த பாதுகாப்புத் தடயவியல் பிரிவிலிருந்து பாதுகாப்பு அல்லது அதியுயர் பாதுகாப்பு தடயவியல் பிரிவுக்கு மாற்றப்படுவது மற்றுமொரு உதாரணமாகும்.

நீங்களும் உங்கள் வழக்கறிஞரும் (உங்களுக்கு ஒருவர் இருந்தால்), நீங்கள் சிகிச்சை பெறும் பிரிவுக்குப் பொறுப்பானவர் அத்துடன்/அல்லது அவர்களது பிரதிநிதி, ஒன்ராறியோ சட்டமா அதிபரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வழக்கறிஞர் மற்றும் ORB உறுப்பினர்கள் இவ் விசாரணையில் கலந்துகொள்வர்.

4. **சபையின் தீர்ப்புகள்**

சபையினால் பின்வரும் **மூன்று விதமான தீர்ப்புகளில்** ஒன்றை வழங்கமுடியும்:

- **தடுப்புக்காவல் உத்தரவு**
- **நிபந்தனையுடன்கூடிய வெளியேற்றல்**
- **முழுமையான வெளியேற்றல்**

உங்களுக்கு வழங்கப்படும் தீர்ப்பை முடிவுசெய்யும்போது சபை கவனத்திற்கொள்பவை:

- பொதுமக்களைப் பாதுகாக்கவேண்டிய தேவை;
- தனிநபரது மனநிலை;
- தனிநபரை சமுதாயத்தில் மீண்டும் இணைத்தல்; மற்றும்
- தனிநபரது ஏனைய தேவைகள்.

சபை அதன் பின்னர் ''இந்தச் சூழ்நிலைகளுக்குத் தேவையான மற்றும் பொருத்தமான தீர்ப்பை வழங்குகின்றது''.

**தடுப்புக்காவல் உத்தரவு**

நீங்கள் மருத்துவமனையில் அல்லது சமூகத்தில் வசிக்கும்போது உங்களுக்குப் பொருந்தும் விதிமுறைகளைத் தீர்ப்பு விபரிக்கும். மருத்துவமனை மற்றும் சூழவுள்ள பகுதிச் சலுகைகள், சமூகச் சலுகைகள் அத்துடன் சமூகத்தில் வசிக்கும்போது அறிக்கையிடவேண்டும் என்ற நிர்ப்பந்தம், சமூகத்தில் தங்குவதற்கான அனுமதி ஆகிய விதிமுறைகளை உள்ளடக்கலாம். மதுபானம் அல்லது போதைப்பொருட்கள் பாவிக்கக்கூடாது அல்லது ஆயுதங்கள் வைத்திருக்கக்கூடாது என்பன போன்ற கட்டுப்பாட்டுப் பட்டியல் ஒன்றும் உங்களுக்கு இருக்கலாம்.

உங்களுடைய தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்தும் பரிசோதனைக்காகச் சிறுநீர் மற்றும்/அல்லது சுவாச மாதிரிகள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படலாம்.

**அங்கீகரிக்கப்பட்ட நபர்** ஒருவருடன் நீங்கள் சமூகத்தினுள் செல்ல அனுமதிக்கப்படலாம். அங்கீரிக்கப்பட்ட நபர், ஒரு விசாரணைப் படிமுறைக்கு உட்படுத்தப்பட்ட, பொறுப்பான நபரினால் (அல்லது பிரதிநிதியினால்) அங்கீகரிக்கப்பட்ட ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது நண்பராக இருக்கலாம். இந்த விசாரணைப் படிமுறை சிகிச்சை அணியுடன் நேர்காணல்கள், சான்று சரிபார்த்தல் மற்றும் அவருக்கெதிரான ஒரு குற்றத்தாக்கலும் இல்லை என உறுதிப்படுத்துவதற்குக் காவல்துறையினருடன் சரிபார்த்தல் ஆகியனவற்றை உள்ளடக்கும். உங்கள் சமூக சேவையாளர் இச் செயல்முறை பற்றி உங்களுக்கும் உங்களது அங்கீகரிப்பட்ட நபர் விண்ணப்பதாரருக்கும் (Approved Person Candidate) மேலதிக தகவல்களைக் கூறுவார்.

**நிபந்தனையுடன்கூடிய வெளியேற்றல்**

நிபந்தனையுடன்கூடிய வெளியேற்றல் ஒன்று உங்களுக்குக் கிடைத்தால், நீங்கள் சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு சமூகத்தில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவீர்கள்.இந்நிபந்தனைகள் Ontario Shores இன் பொறுப்பான நபர் அல்லது பிரதிநிதிக்கு வருகையைத் தெரிவித்தல், மற்றும் சபைக்கு முகவரி மாற்றம் எதனையும் அறியத்தருதல் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் மதுபானம் அருந்தக்கூடாது அல்லது ஏதேனும் சட்டவிரோதமான வஸ்துக்களை உட்கொள்ளக்கூடாது, எந்த ஒரு ஆயுதத்தையும் வைத்திருக்கக்கூடாது போன்ற நிபந்தனைகளையும் உள்ளடக்கக்கூடும்.

உங்களுடைய மனநல நோய்க்கான அறிகுறிகள் திரும்பத் தோன்றினால், நீங்கள் ஒரு தன்னார்வ நோயாளியாக அல்லது **மனநல சட்டப் பிரிவின்** கீழ் நிர்ப்பந்திக்கப்பட்ட நோயாளியாக மீண்டும் மருத்துவமனைக்கு அனுமதிக்கப்படக்கூடும். இவ் விடயத்தில் உங்கள் சூழ்நிலைகளை மீளாய்வு செய்வதற்காக ஒரு முன்கூட்டிய ORB விசாரணை நடாத்தப்படக்கூடும்.

**<u>முழுமையான வெளியேற்றல்</u>**

உங்களுக்கு ஒரு முழுமையான வெளியேற்றல் வழங்கப்பட்டால், சபை உங்களுக்கு அறிவிப்பதுடன் உங்களை உடனடியாக வெளியேற்றலாம். ஒரு முழுமையான வெளியேற்றல் தீர்ப்பொன்றை வழங்க முன்னர், சபை அந்த நபர் ''பொது மக்களின் பாதுகாப்பிற்குக் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக இல்லை'' என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

**<u>உச்ச ஆபத்து பெயர்க்குறிப்பீடு</u>**

அரிதான சந்தர்ப்பங்களில் ஒரு NCR நோயாளிக்கு நீதிமன்றத்திலிருந்து " உச்ச ஆபத்து'' என்ற பெயர்க்குறிப்பீடு கிடைக்கலாம். இந்தப் பெயர்க்குறிப்பீடின் கீழ் இருக்கும்போது, மட்டுப்படுத்தப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவு அமுல்செய்யப்பட வேண்டும்.

**<u>எனக்கெதிராக ஒரு குற்றப்பதிவு உள்ளதா?</u>**

குற்றவியலின்படி பொறுப்பு இல்லை **(NCR)** அல்லது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படத் தகுதியற்றவர் என்ற தீர்ப்பு உங்களுக்குக் கிடைத்திருந்தால், குற்ற அட்டவணையின் விளைவாக உங்களுக்கெதிராகக் குற்றப் பதிவு இல்லை. நீங்கள் ஒரு NCR நிலையில் இருக்கும்போது உங்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் பற்றியும் உங்களுடைய தீர்ப்புக்கான நிபந்தனைகள் பற்றியும் காவல்துறையினருக்கு அறிவிக்கப்படும். உங்களுக்கு ஒரு முழுமையான வெளியேற்றல் கிடைக்கப்பெற்றதும், காவல்துறையினர் உங்களது கடந்தகால NCR நிலை பற்றி அறியக்கூடியதாக இருப்பதுடன் உங்களது முழுமையான வெளியேற்றல் திகதியையும் அணுக முடியும்.

## 5. நிபந்தனை/சிறப்புரிமை அங்கீகரித்தல் படிமுறை

ORB இடமிருந்து உங்களுக்கு ஒரு தடுப்புக்காவல் உத்தரவு கிடைத்திருந்தால், உங்களுடைய தீர்ப்பில் அடங்கியுள்ள நிபந்தனைகள், அடுத்த விசாரணை இடம்பெறும் வரை உங்களுக்குக் கிடைக்கும் உச்ச நியதிகளை விபரிக்கும். இந்த ORB நிபந்தனைகளின் தர நிலைகள் மற்றும் மருத்துவமனை சிறப்புரிமை முறைமைக்குப் பரிச்சயப்படுத்தப்பட சில காலம் எடுக்கும். பின்வரும் தகவல்கள் இப் படிமுறை சம்பந்தமாக உங்களுக்கு உதவக்கூடும்.

மூன்று வெவ்வேறு வகையான நிபந்தனைகள் உள்ளன:

- **மருத்துவமனை மற்றும் சூழவுள்ள பகுதி சிறப்புரிமைகள் (''GPs'' என்றும் அழைக்கப்படுகின்றன)**
  இவை நீங்கள் மருத்துவமனைக்குள்ளும் மருத்துவமனையைச்சூழவுள்ள பகுதிகளிலும் எவ்வளவுக்கு அணுகுவீர்கள் என்பது பற்றிய நிபந்தனைகள் ஆகும்.
- **சமூக சிறப்புரிமைகள் (''TPs'' என்றும் அழைக்கப்படுகின்றன)**
  இவை நீங்கள் சமூகத்தில் எவ்வளவுக்கு அணுகுவீர்கள் என்பது பற்றிய நிபந்தனைகள் ஆகும் (அதாவது மருத்துவமனை சூழவுள்ள பகுதிக்கு வெளியே).

OntarioShores இல் சிறப்புரிமை முறைமை மருத்துவமனை மற்றும் சூழவுள்ள பகுதிச் சிறப்புரிமைகள் தரநிலைகள் 1-7 இலிருந்தும் மற்றும் சமூகச் சிறப்புரிமைகளுக்காக 8-14 இலிருந்தும் வரிசைப்படுகின்றன. தரநிலை உயர உயர அணுகுதலும் பொறுப்பும் அதற்கேற்ப கூடுதலாக இருக்கும்.

மருத்துவமனை மற்றும் சூழவுள்ள பகுதிச் சிறப்புரிமைகள் அத்துடன் சமூகச் சிறப்புரிமைகள் கீழே விபரிக்கப்படுகின்றன.

.

## Ontario Shores இல் சிறப்புரிமைத் தரநிலைகள்

## ORB நிபந்தனைக் கோரிக்கைகள்

### உள்-மருத்துவமனை மற்றும் சூழவுள்ள பகுதிச் சிறப்புரிமைகள்

| தரநிலை1 | **உடனிருத்தல்** |
|---|---|

**மறைமுகமான கண்காணிப்பு**

| தரநிலைகள | **விவரம்** |
|---|---|
| **2** | 1/2மணித்தியாலம் வரை,0800-1600 மணி,15 நிமிட இடைவெளிகளில் தொடர்புகொள்ளவும் |
| **3** | 1 மணித்தியாலம் வரை,0800-1800 மணி,30 நிமிட இடைவெளிகளில் தொடர்புகொள்ளவும் |
| **4** | 2 மணித்தியாலங்கள் வரை,0800-2100 மணி, 60 நிமிட இடைவெளிகளில் தொடர்புகொள்ளவும் |
| **5** | 4 மணித்தியாலங்கள் வரை,0800-2100 மணி,<br>2 மணித்தியால இடைவெளிகளில் தொடர்புகொள்ளவும் |
| **6** | 8 மணித்தியாலங்கள் வரை,0800-2100 மணி,<br>4 மணித்தியால இடைவெளிகளில் தொடர்புகொள்ளவும் |
| **7** | 12 மணித்தியாலங்கள் வரை 0800-2100 மணி,<br>6 மணித்தியால இடைவெளிகளில் தொடர்புகொள்ளவும் |

## வெளி– சமூகச் சிறப்புரிமைகள

| தரநிலை 8 | உடனிருத்தல் |
|---|---|

**மறைமுகமான கண்காணிப்பு**

| தரநிலைகள் | விவரம் |
|---|---|
| **9** | 3 மணித்தியாலங்கள் வரை, 0800-2100 மணி, 1-மணித்தியால இடைவெளியில் தொடர்புகொள்ளவும் |
| **10** | 6 மணித்தியாலங்கள் வரை,0800-2100 2-மணித்தியாலஇடைவெளியில் தொடர்புகொள்ளவும் |
| **11** | 8 மணித்தியாலங்கள் வரை,0800-2100 மணி, 4- மணித்தியால இடைவெளியில் தொடர்புகொள்ளவும் |
| **12** | 12மணித்தியாலங்கள் வரை,0800-2100 மணி, 6-மணித்தியால இடைவெளியில் தொடர்புகொள்ளவும் |
| **13** | ஒரு கிழமை வரை, தினமும் 12- மணித்தியால இடைவெளியில் தொடர்புகொள்ளவும் |

## சமூக வதிவிடம் -தடுப்புக்காவல் உத்தரவு

| தரநிலை 14 | சமூக வதிவிடத்துக்கு அங்கீகாரம் |
|---|---|
| | • சமூக வதிவிடத்துக்கு அங்கீகாரம்<br>• சமூக வதிவிட மாற்றத்திற்கு அங்கீகாரம்<br>• சமூக வதிவிடத்திலிருந்து வெளியேறுவதற்குவிடுமுறைக் கோரிக்கை |

<u>முழுமையான சமூக அனுமதிகள்:</u> பொறுப்பான நபரினால் அங்கீகரிக்கப்பட்டவற்றிலும் உங்கள் தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையிலும் நீங்கள் மருத்துவ மனையிலிருந்து 12 மணித்தியாலங்கள் வரை வெளியே செல்லலாம் அல்லது சமூகத்தில் வார இறுதிகளில் அல்லது அதற்குத் கூடியகாலத்திற்குத் தங்கலாம.

நோயாளர் பராமரிப்புப் பகுதியில் (PCU) முதன்முறை அனுமதிக்கப்படும்போது NCR நிலையிலுள்ள ஒவ்வொரு நோயாளிக்கும் இரண்டு அடிப்படை சிறப்புரிமைத் தரநிலைகள் உண்டு: தீர்ப்பின்படி, மருத்துவமனை மற்றும் சூழவுள்ள பகுதி சிறப்புரிமைகளின் **தரநிலை 1** மற்றும் சமூகச் சிறப்புரிமைகளின் **தரநிலை 8.** இதன் அர்த்தம் NCR நிலையிலுள்ள ஒரு நோயாளி என்ற முறையில், ஊழியர் (அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நபர்) உடன் சேர்ந்து, நீங்கள் மருத்துவமனையைச் சூழவுள்ளபகுதியில் நடந்து செல்லலாம். அத்துடன் ஊழியர் (அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நபர்) உடன் சேர்ந்து நீங்கள் சமூகத்தினுள் செல்லலாம்.

உங்களதும் உங்களது சிகிச்சை அணியினதும் குறிக்கோள், நீங்கள் மீண்டும் சமூகத்தில் இணைவதற்குத் துணைபுரிவதற்காக உங்களுடைய தீர்ப்பின் நிபந்தனைகளைப் பாவிப்பதற்கு ஆதரவளிப்பதாகும். உங்களுடைய இலக்கை அடைவதற்கு, நீங்கள் சிறப்புரிமைகளின் ஒரு தரநிலையிலிருந்து அடுத்ததற்குப் படிப்படியாக நகர்ந்து செல்வீர்கள். உங்களுடைய சிறப்புரிமைகளைப் பயன்படுத்தும் அதே வேளையில், நீங்கள் பிரிவை விட்டு விலகிச் செல்லும் ஒவ்வொரு முறையும் சிகிச்சை அணி ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. பணியாளர்கள் நீங்கள் உட்புகவும் வெளியேறவும் உதவுவர். வழமையாக உங்களை அவதானிப்பவர்தான் நீங்கள் உள்ளே வந்து சேர்வதற்கும் வெளியே செல்வதற்குமான கையொப்பமிடுதலை மேற்கொள்வதுடன் உங்களது சிறப்புரிமைப் பாவனை பற்றிய பதிவேட்டையும் வைத்திருப்பார். நீங்கள் வெளியே இருக்கும்போது அவரைத் தொடர்புகொள்ளவேண்டும். இப்படிமுறையில் உங்கள் ஈடுபாடு மிகவும் முக்கியமானது. நீங்கள் ஒரு உயர்ந்த தரநிலையைப் பயன்படுத்த ஆயத்தமாக இருக்கின்றீர்கள் என நம்பும்போது, நீங்கள் பூர்த்தி செய்வதற்காக நோயாளர் நிபந்தனைக் கோரிக்கைப் படிவம் என அழைக்கப்படும் ஒரு படிவம் உள்ளது.

**நோயாளர் நிபந்தனைக் கோரிக்கைப் படிவம்**


Ontario Shores

**Patient's Condition Request**

**<u>உங்களது சிறப்புரிமைகளைப் பயன்படுத்தல</u>**

அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனையைப் பல தடவைகள் பாவித்த பின்னர், உங்களுடைய தற்போதைய சிறப்புரிமைகளைப் பயன்படுத்துவதில் நீங்கள் எவ்வளவுதூரம் வெற்றியடைந்துள்ளீர்கள் என்பதைச் சிகிச்சை அணி மதிப்பீடு செய்யும். அணியின் பரிந்துரைப்பின் அடிப்படையில், உங்கள் உளநல மருத்துவர் நீங்கள் ஒரு உயர்ந்த தரத்தில் சிறப்புரிமைகளைப் பயன்படுத்துவதற்குப் பொறுப்பான நபரிடம் அங்கீகாரத்துக்கு விண்ணப்பிப்பார். பொறுப்பான நபரிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கப்பெறும் வரை நீங்கள்

உங்களது புதிய தரநிலையைப் பயன்படுத்த முடியாதிருக்கலாம்.

ஒரு பொது நியதியாக, ஒரு தரநிலையை வெற்றிகரமாக நீங்கள் மேலும் மேலும் அடிக்கடி பயன்படுத்துவது பணியாளர்களுடனான உங்கள் தொடர்புகள் மற்றும் திரும்பிவரும் நேரங்களைப்பேணல், உங்கள் பயண ஒழுங்குகளை முறையாக நிரப்பிக் கொள்ளல் பணியாளர்களுக்குப் பிரச்சினை தரும் சம்பவங்கள் இல்லாமல் இருக்கச் செய்தல் போன்றவை அடுத்த தரத்துக்கு நகர்ந்து செல்வதற்குக் கூடிய வாய்ப்புண்டு எனப் பொருள்படும்.

**நீங்கள் நேரம் தவறாது உங்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது முக்கியமாகும்.** நீங்கள் தொடர்புகொள்வதில் நேரம் பிந்தினால், ஒரு சில நிமிடங்கள் என்றாலும்கூட உங்கள் உரிமைகள் நிறுத்தப்படுவதற்கான ஆபத்து உங்களுக்கு உண்டு. உங்களுடைய சலுகைகள் நிறுத்தப்படும்போது, உளநல மருத்துவருக்கும் சிகிச்சை அணிக்கும் அறிவிக்கப்படும். உங்களுடைய நிலைமையை மீளாய்வு செய்த பின்னர், உங்களுடைய சிகிச்சை அணி அவற்றை முன்னைய நிலைக்குக் கொண்டுவரத் தீர்மானித்தால், உங்கள் மனநல மருத்துவர் அவை முன்னைய நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் ஒரு படிவத்தில் கையொப்பமிட வேண்டும். உங்களுடைய சிறப்புரிமைகள் மூன்று முறைகள் நிறுத்தப்படும் பட்சத்தில், சிகிச்சை அணி முன்பு வைத்திருந்த எந்த நிபந்தனையையும் முன்னைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு, பொறுப்பான நபரிடம் அங்கீகாரம் பெறும்வரை அவை இரத்துச் செய்யப்படும். உங்களுடைய **தீர்ப்பில்** குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பாவிப்பதற்கான தேவைகளைத் தொடர்ந்து வைத்திருப்பது அவசியமாகும்.

அரிதான சந்தர்ப்பங்களில் சிறப்புரிமைகள் மறுக்கப்படலாம். உங்களுடைய மனநிலை பற்றி அல்லது சிகிச்சைப் பிரிவில் ஏனைய உடல்நலம் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக சிகிச்சை அணிக்குப் பிரச்சினைகள் இருக்கும் நேரங்களில் இது நிகழ்கின்றது.

## மனநல நிலைமை மதிப்பீடும் நிபந்தனை இடர் மதிப்பீடும்

பிரிவை விட்டு நீங்கள் விலக முன்னர், உங்களுடைய நிபந்தனையை நீங்கள் பயன்படுத்துவது பாதுகாப்பானதா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒரு தாதி உங்களை மதிப்பீடு செய்வார்.இது இடர் மதிப்பீடு என்று அழைக்கப்படும். பிரிவை விட்டு நீங்கள் விலகிச் செல்வதற்கு முன்னர் தாதி உங்களை மதிப்பீடு செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

## பயண ஒழுங்குகள்

நீங்கள் மறைமுகமாகக் கண்காணிக்கப்பட்ட ஒரு சமூக சுற்றுலாவைத் திட்டமிடும்போதெல்லாம் உங்கள் தர நிலை எதுவாக இருந்தாலும் உங்களுடைய முழுப் பயண ஒழுங்கையும் விரிவாக விபரிக்கும் ஒரு படிவத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும். உங்களுடைய பயண ஒழுங்கு நீங்கள் எங்கு செல்கின்றீர்கள், எவ்வளவு காலத்துக்கு, யார் உங்களுடன் வருகின்றார்கள் மற்றும் எப்படி மருத்துவமனையிலிருந்து போய் வருவீர்கள் என்பனவற்றை விபரமாகத் தெளிவுபடுத்தும். தேவையேற்படின் ஊழியர்கள் உங்களிடம் வந்துசேர்வதற்காக முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.



Ontario Shores

**Forensic Patient Community Itinerary**


Name | Today's date
CBe | Community condition level
Outing date | Date returning
Departure time | Expected time of return
Check in times

**ACCOMPANIED BY**

Name | Relationship
Address | Telephone number
How are you getting there?
How are you getting back?
Client signature
Date and time itinerary received | Itinerary received by (name of staff)
Itinerary approved ☐ Yes ☐ No
Medication ordered ☐ Yes ☐ N/A
Comments

Incident log updated ☐ Yes ☐ N/A
Staff signature | Date

**PLEASE COMPLETE BACK OF FORM**



Ontario Shores

**Forensic Patient Community Itinerary**

Check in times

| Date and time | Destination from / to | Names of persons you will visit / have contact with | Activity | Address | Telephone number |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**நீங்கள் புறப்படும் நேரத்துக்கு இரண்டு மணித்தியாலங்கள் முன்னராக, பயணத் திட்டத்தை உங்களுக்கென ஒதுக்கப்பட்ட/நியமிக்கப்பட்ட தாதியிடம் கொடுத்து அவரது அங்கீகாரம் பெறவேண்டும்.** சுற்றுலாவுக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னராகப் பயண ஒழுங்குகள் மாற்றப்படலாம்.

**தரநிலை** 13 ஐ நீங்கள் அடைந்ததும் சிகிச்சை அணியினால் கோரப்பட்டாலேயன்றி பயண ஒழுங்கை நீங்கள் சமா்ப்பிக்கவேண்டியதில்லை.

## நிகழ்வுக் குறிப்பேடு

நீங்கள் சமூகத்தில் இருக்கும்போது நீங்கள் ஒரு **நிகழ்வுக் குறிப்பேட்டை** வைத்திருப்பீா்கள்.இது சட்டைப்பைக்குள் வைக்கக்கூடிய ஒரு சிறிய குறிப்புப் புத்தகமாகும். குறிப்பிட்ட இடங்களில் நீங்கள் நிற்கும் திகதியையும் நேரத்தையும், நீங்கள் சந்தித்தவா்களது பெயா்ப் பட்டியல் மற்றும் ஒவ்வொரு இடத்திலும் உங்கள் செயற்பாடுகள் ஆகியவற்றை நீங்கள் அதில் பதிவுசெய்ய வேண்டும். உங்களிடம் இருக்கக்கூடிய எதாவது பற்றுச்சீட்டுகள், உதாரணமாக, ஒரு திரைப்படப் பற்றுச்சீட்டு, நிகழ்வுப் பதிவேட்டில் அதற்குரிய திகதியில் இணைக்கப்படவேண்டும். நோயாளா் பராமரிப்புப் பிரிவுக்கு நீங்கள் திரும்பும்போது அங்கீகரிக்கப்பட்ட பயண ஒழுங்குடன் உங்கள் செயற்பாடுகள் அமைந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு ஊழியா், நிகழ்வுக் குறிப்பேட்டை மீளாய்வு செய்வாா். அவா் நிகழ்வுக் குறிப்பேட்டில் கையொப்பமிட்டு உங்களிடம் திருப்பித் தருவாா். **தரநிலை** 13 ஐ நீங்கள் அடைந்ததும் சிகிச்சை அணியினால் கோரப்பட்டாலேயன்றி நிகழ்வுக் குறிப்பேட்டை நீங்கள் வைத்திருக்க வேண்டியதில்லை.

## 6. சிகிச்சை அணியின் பங்கு


உங்கள்சிகிச்சை அணி உங்கள் புனா்வாழ்வில் பங்கெடுப்பதிலும் ORB நிபந்தனைகளைத் தீா்மானிப்பதிலும் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. பல்துறை சிகிச்சையணியில் தாதியா், உளநல மருத்துவா்கள், சமூக சேவையாளா்கள், நாளாந்த வாழ்க்கையின் இயக்கத்துக்கான சிகிச்சையாளா், பொழுதுபோக்கு சம்பந்தமான சிகிச்சையாளா் மற்றும் ஒரு சிகிச்சை முகாமையாளா் உள்ளடங்குவா். ஒரு உளவியல் நிபுணா், ஒரு மருந்தாளா் அல்லது நல உணவு வல்லுனா் ஆகியஏனைய மருத்துவா்களையும் இது உள்ளடக்கலாம். உங்களுக்கு ஒரு உளநல மருத்துவா், ஒரு சமூக சேவையாளா் அத்துடன் உங்களுக்கென ஒதுக்கப்பட்ட தாதியும் நியமிக்கப்படுவாா்கள். உங்களுக்கென ஒதுக்கப்பட்ட தாதிபணிபுரியாத நேரங்களில் வேறொரு தாதி உங்களுக்காக நியமிக்கப்படுவாா்.

உங்கள் சிகிச்சை அணி ORB க்கான மருத்துவமனை அறிக்கையை எழுதுவதற்கும் பொறுப்பாக இருக்கும். நீங்கள் எவ்வளவு நலமாக இருக்கின்றீர்கள், நீங்கள் என்ன சவால்களை எதிர்நோக்குகின்றீர்கள் மற்றும் அடுத்த வருடத்துக்கு ORB இடமிருந்து நீங்கள் எதைக் கோருகின்றீர்கள் என்பன உள்ளடங்கலாக உங்கள் சூழ்நிலைகளை மீளாய்வு செய்வதற்கு ORB க்கு உதவும்பொருட்டு சிகிச்சை அணியிடமிருந்து பெறும் தகவல்களை இவ்வறிக்கை வழங்குகின்றது.

ORB இனது அறிக்கை, சிகிச்சை அணி சபைக்கு வழங்கும் சிபாரிசுகளை உள்ளடக்குகின்றது. ஆகவே, உங்கள் சிகிச்சை அணி உறுப்பினர்களுடன் நீங்கள் தொடர்புகொண்டு அவர்கள் உங்களை மதிப்பீடு செய்வதற்கும் நீங்கள் எவ்வளவு நலமாக இருக்கின்றீர்கள் என்று கருத்துக் கணிப்பதற்கும் ஏராளமான வாய்ப்புக்கள் கொடுப்பது முக்கியமாகும். உங்கள் சிகிச்சை அணியுடன் நீங்கள் தொடர்பு கொள்ளாவிட்டால் அவர்களுக்கு உங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ள முடியாதிருப்பதுடன், சிகிச்சைப் பிரிவுக்கு வெளியில் அல்லது சமூகத்தில் நீங்கள் எப்படிச் சமாளிப்பீர்கள் என்பதுபற்றி அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவும்மாட்டார்கள். கவனம் செலுத்தப்படவேண்டியது, உங்களுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றனவா என்பதைவிட, உங்கள் கஷ்டங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றீர்கள் என்பதும் தீர்வுக்கான நடவடிக்கைகளை எடுப்பதுமாகும்.

இப் படிமுறையில் உங்களுக்கு உதவி புரிவதற்கு உங்கள் சிகிச்சை அணி காத்திருக்கின்றது. சிலவற்றை உங்களுக்குப் புரிந்துகொள்ள முடியாதிருந்தால், உங்கள் சிகிச்சை அணி உறுப்பினர்களைக் கேளுங்கள்.

# கேட்டுப் பாருங்கள்



## 7. மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்படல்

மருத்துவமனையிலிருந்து வெளியேறுவதும் மீண்டும் சமூகத்தில் இணைந்துகொள்ளுவதும் உங்களதும் உங்கள் சிகிச்சை அணியினதும் குறிக்கோளாகும். எனினும் சமூகத்தில் வாழ்வதென்பது நடைமுறையில் சாத்தியப்படுவதற்கு முன்னர் அது உங்கள் தீர்ப்பில் ஒரு நிபந்தனையாக எழுதப்படவேண்டும். உங்களுடைய தீர்ப்பு உங்களுடைய வெளியேற்றலுக்கான நிபந்தனைகளைக் குறிப்பிடும். (உதாரணமாக, நீங்கள் எங்கு வாழலாம், மருத்துவமனைக்கு மீண்டும் எத்தனை தடவைகள் வரவேண்டும் என்பன). நீங்கள் சமூக வாழ்வுக்கு மீண்டும் வெற்றியுடன் திரும்புவதற்கு வசதி செய்வதே இதன் நோக்கமாகும்.

### மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான படிமுறைகள்

வெளியேறுவது அல்லது சமூகத்தில் வாழ்வது,**தரநிலை** 14. நீங்கள் **தரநிலை** 13 இல், உங்கள் தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பொறுத்து, மருத்துவமனையிலிருந்து வெளியேறி நீடிக்கப்பட்ட காலத்திற்கு சமூகத்தில் தங்கமுடியும். உதாரணமாக, நீங்கள் வார இறுதிகளில் வீடு செல்லக்கூடும், முடிவில் ஒரே நேரத்தில் முழு வாரங்களும் வீட்டில் தங்கலாம். வீட்டுக்குச் செல்வது ஒரு விருப்பாக இல்லாவிட்டால் சமூகத்தினுள் பல சுற்றுலாக்கள் செல்வதற்காக நீங்கள் உங்களுடைய ORB நிபந்தனைகளைப் பாவிக்கலாம். வெளியேற்றப்படுவதைத் கருத்திற்கொள்ள முன்னர், உங்களால் சமூக சூழலுக்குள் இணைவதற்கு முடியுமென்றும் தயாரென்றும் சிகிச்சை அணிக்குச் சான்று கொடுப்பதற்காக நீங்கள் உங்களது சிறப்புரிமை தரநிலைகளைப் பல தடவைகள் பயன்படுத்தவேண்டியிருக்கும்.

உங்களுக்கென நியமிக்கப்பட்ட சமூக சேவையாளர் வீட்டு வசதி (மருத்துவமனையிலிருந்து வெளியேறும்போது நீங்கள் எங்கு வாழ்வீர்கள்) அத்துடன் பகல்நேரத்தில் என்ன செய்வீர்கள் என்பனவற்றில் கவனம்செலுத்தி உங்களது வெளியேறும் திட்டமிடலில் உதவிசெய்வார். தேவையேற்படும்போது, உங்கள் சமூக சேவையாளர் ஆதரவான வீட்டுவசதியை நீங்கள் அணுகுவதற்கு உதவுவார். இச் செயல்முறை பொதுவாக நேரம் எடுக்கும். பொறுப்பான நபரால் அங்கீகரிக்கப்பட்ட தங்குமிட வசதியில் நீங்கள் வாழ்வேண்டும் என்ற ஒரு நிபந்தனை அநேகமாக தீர்ப்புகளில் உள்ளடக்கப்படும்.

நீங்கள் வெளியேற்றப்பட முன்னர், உங்கள் உள்நோயாளர் சிகிச்சை அணிக்கும் நீங்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் ஆதரவு வழங்கும் வெளி நோயாளர் சிகிச்சை அணிக்கும் இடையில் ஒரு கூட்டம் நடாத்தப்படும். சமூகத்தில் நீங்கள் வாழும்போது வெளி நோயாளர் சிகிச்சை அணியை நீங்கள் அடிக்கடி, குறைந்தபட்சம் உங்களுடைய தீர்ப்பில் குறிப்பிட்டவாறு சந்திக்கவேண்டும்.

சமூகத்தில் வெற்றிகரமாக வாழ்வதென்பது உங்களுடைய ORB தீர்ப்பில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றீர்கள் என்பதை நிரூபிக்கின்றது. உங்களது இறுதி இலக்கு ORB இலிருந்து முழுமையான வெளியேற்றம் பெற்றுக்கொள்ளவதாகும். ORB இலிருந்து உங்களுக்கு முழுமையான வெளியேற்றம் கிடைத்தால், நீங்களாக முன்வந்து சிகிச்சையைத் தொடரும்படியும் உங்கள் மனநலத்தைச் சிறப்பாக வைத்திருப்பதற்குத் துணை புரியும் எல்லாவற்றையும் தொடர்ந்து செய்யுமாறும் ஊக்குவிக்கப்படுகின்றீர்கள்.



**சிறந்த மனநல ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான குறிப்புகள்**

**உங்கள் வாழ்க்கை முறையைச் சமநிலைப்படுத்துங்கள்**

**ஆரோக்கியமான உணவருந்துங்கள்**

**ஒழுங்காக உடற்பயிற்சி செய்யுங்கள்**

**நம்பிக்கை வைத்திருங்கள்**

**நீங்கள் விரும்பும் செயல்களிலும் குழுக்களிலும் இணையுங்கள்**

**நண்பர்கள் வட்டம்**

**ஆதரவளிக்கும் சூழல்**

**வரைவிலக்கணங்கள்**

**அங்கீகரிக்கப்பட்ட நபர்:** மருத்துவக் குழுவின் பரிந்துரைப்பின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டிற்குத் தேவைப்படும் துணையாக இருப்பதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்குத் தகுதியானவர் என, பொறுப்பான நபரால் அங்கீகரிக்கப்பட்ட, ஊழியரல்லாத ஒருவர்.

**நிபந்தைனை இரத்துச்செய்யப்படல்:** பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றது: 1) ஒரு நிபந்தனை மூன்று தடவைகள் நிறுத்திவைக்கப்படும்போது, அல்லது 2) மருத்துவ நிலையின்படி குறிப்பிடத்தக்க காலத்துக்கு ஒரு முன்னேற்றமும் இருக்கமாட்டாது என சிகிச்சை அணி நம்பும்போது, அல்லது 3) ஒரு நிபந்தனையை மீறுதல் நிபந்தனையை உடனடியாக இரத்துச்செய்வதை நிர்ப்பந்திக்கின்றது. ஒரு நிபந்தனை இரத்துச்செய்யப்பட்டால் பொறுப்பான நபருக்குத் தெரிவிக்கப்படும்.

**மருத்துவ ஊழியரது வழித்துணை:**
வேறொருவரையும் சேர்க்காது ஒரு நோயாளிக்கு மாத்திரம் (1:1) வழித்துணை வழங்கப்படுவதுடன், எந்நேரமும் அவர் ஊழியருக்கு மிக அருகிலும் ஊழியரது கண்ணுக்கெட்டிய தூரத்திலும் இருப்பார். குறிப்பிட்டபோது கூடியளவு ஊழியருக்கு-நோயாளி என்ற விகிதம் கடைப்பிடிக்கப்படலாம்.

**மருத்துவ ஊழியரது கண்காணிப்பு/உடனிருத்தல்:**
ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோயாளிகள் கூட்டிச்செல்லப்படுவதுடன் ஆகக் குறைந்தது ஒரு ஊழியரது கண்ணுக்கெட்டிய தூரத்தில் வைத்திருக்கப்படுவதுடன் நோயாளர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது எல்லா நேரத்திலும் தெரிந்திருந்திருக்கும்.

**மருத்துவ ஊழியர்**: சம்பளம் பெறும் ஒரு மருத்துவ ஊழியர், நோயாளர் பராமரிப்பு மற்றும்/அல்லது நிகழ்ச்சிகளில் நேரடியாக ஈடுபட்டிருப்பார். தேவையின் சிக்கல் தன்மை குறைவாகவும், விளைவுகளை யூகிக்கும் தன்மை கூடியதாகவும், பாதகமான விளைவுகள் ஏற்படும் சாத்தியங்கள் குறைவாகவும் உள்ள ஒரு NCR நோயாளியுடன் ஒரு பதிவுசெய்யப்பட்ட ஊழியரும் PCA (நோயாளர் பராமரிப்பு பணியாளர்) உம் சேர்ந்து செல்லக்கூடும்.

**நிபந்தனை:** தீர்ப்பில் அடங்கியுள்ள நோயாளி கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை விபரிக்கும் பதங்கள்.

**முக்கியமான கோப்பு:** ஒரு தடயவியல் நோயாளி சம்பந்தமான முக்கியமான ஆவணங்களைக் கோவைப்படுத்தும், மருத்துவ அறிக்கைகளின் ஒரு பகுதி. இந்த ஆவணங்கள் உள்ளடக்குபவை: தற்போதைய நிலைமை அங்கீகாரப் படிவம்(கள்); தற்போதைய தீர்ப்பு மற்றும் தீர்ப்புக்கான காரணங்கள்; ஒன்ராறியோ மீளாய்வு சபைக்கு சமீபத்திய மருத்துவமனை அறிக்கை; மற்றும் நிகழ்வுக் குறிப்பேடு.

**தீர்ப்பு:** ஒரு நீதிமன்றத்தினால் அல்லது ஒரு மீளாய்வுச் சபையினால் கனடா குற்றவியல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட, ஒரு குறிப்பிட்ட திகதியில் நடைமுறைக்கு வரும், குற்றம்சாட்டப்பட்டவர் எங்கு வசிக்கவேண்டும், அதற்குரிய நிபந்தனைகள் தகவலளிக்கும் தேவைகள் என்பனவற்றை வரையறுக்கும் விபரங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று நோயாளி மற்றும் மருத்துவமனைக்குப் பொறுப்பானவரைச் சட்டபூர்வமாக நிர்ப்பந்திக்கும் தீர்ப்பு.

**FARU**:தடயவியல் மதிப்பீடு மற்றும் புனர்வாழ்வுப் பிரிவு

**FAU:**தடயவியல் மதிப்பீட்டுப் பிரிவு

**FCRU:**தடயவியல் சமூக ஒருங்கிணைப்புப் பிரிவு

**FOS:** தடயவியல் வெளிநோயாளர் சேவை

**FPRU:**தடயவியல் உளநோய் புனர்வாழ்வுப் பிரிவு

**FRU:**தடயவியல்புனர்வாழ்வுப் பிரிவு

**FTU:**தடயவியல் இடைக்காலப் பிரிவு

**நிகழ்வுக் குறிப்பேட்டுச் சுருக்கம்:** 3353-42 எதிர்காலத் திட்டமிடலையும் புனர்வாழ்வையும் பாதிக்கும் சாதகமான பாதகமான சம்பவங்கள் இரண்டையும், நிகழ்வுகள் மற்றும் இடைத் தொடர்புகளைப் பதிவதற்கு உபயோகப்படுத்தும் படிவம்.

**குற்ற அட்டவணை:** தனிநபர்NCR அல்லது Unfit (தகுதியற்றவர்) எனக் காணப்பட்ட ஒரு சட்டப்படி குற்றம்.

**மறைமுகமான கண்காணிப்பு:** மருத்துவ அணியினால் உருவாக்கப்பட்டு பொறுப்பான நபரினால் அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையிடும் மற்றும் கண்காணிப்பு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட நோயாளி சம்மதிக்கின்றார். ஒரு அங்கீகரிக்கப்பட்ட பயண ஒழுங்கில் கூறப்பட்டிருப்பதுபோல பொறுப்பான நபர் அல்லது பிரதிநிதியிடம் கால அட்டவணைப்படி அவ்வப்போது வருகைதர வேண்டும்; பொறுப்பான நபரினால் அல்லது பிரதிநிதியினால் கால அட்டவணைப்படி நேரடிக் கவனிப்புத் தேவைப்படலாம். சிகிச்சை அணியிலுள்ள குறிப்பாக நியமிக்கப்பட்டவர், நோயாளியின் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட இருக்குமிடங்களை எல்லா நேரங்களிலும் அறிந்திருப்பார்.

**பயண ஒழுங்கு:** நோயாளி ஒரு நிபந்தனையைப் பயன்படுத்தும்போது அவர் நிற்கும் இடங்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் நேரங்களை விபரித்து அவர் எழுத்துமூலம் சமர்ப்பித்த ஒரு முன்மொழிவு. இது நிபந்தனை பயன்படுத்துவதற்கு முன்னர் சிகிச்சை அணி உறுப்பினர் (நோயாளர் பராமரிப்புப் பணியாளர் நீங்கலாக) ஒருவரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆபத்து நேரக்கூடிய சூழ்நிலைக்கு நோயாளியை உட்படுத்தக்கூடிய பயண ஒழுங்குகளையும், நோயாளியின் நடமாட்டங்களின் பயண ஒழுங்கைப் பணியாளர்கள் சரிபார்க்க முடியாத ஒரு பயண இடத்தையும் சிகிச்சைப் பணியாளர்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

**நிகழ்வுக் குறிப்பேடு:** நோயாளி ஒரு நிபந்தனையை நிறைவேற்றும்போது குறிப்பிட்ட முகவரிகளிலும் இடங்களிலும் திகதி மற்றும் நேரத்தை விபரிக்கும் நோயாளி வைத்திருக்கும் பதிவேடு. பணியாளர்களுடன் செல்லும்போது நிகழ்வுக் குறிப்பேடு தேவையில்லை.

**குற்றவியலின்படி பொறுப்பு இல்லை (NCR):**குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தின் அடிப்படையை உருவாக்கும் செயலைப் புரிந்தார் ஆனால் அந்த நேரத்தில் ஒரு மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்ததால் கனடா குற்றவியல் பி. 16(1) இன் கீழ் குற்றவியல் பொறுப்பிலிருந்து நீக்கப்படுகின்றார் என்ற ஒரு நீதிமன்றத் தீர்ப்பு. இத்தீர்ப்பு அந்தத் தனிநபர் குற்றம் புரிந்தார் ஆனால் குற்றத்தின் இயல்பையும் தரத்தையும் புரிந்துகொள்ளும் அல்லது அது தவறு என்று அறிந்துகொள்ளும் திறன் குறைவால் அத் தனிநபர் மனநோய் குற்றவியல் பொறுப்பிலிருந்து விலக்கப்படுகின்றார் என அறிவிக்கும் ஒரு சிறப்புத் தீர்ப்பு ஆகும்.

**நிகழ்வு:** ஒவ்வொரு தடவையும் நோயாளர் பராமரிப்புப் பிரிவை விட்டு நோயாளி வெளியேறுவதென்பது நிபந்தனையைப் பயன்படுத்தும் ஒரு நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

**ஒரு தடவை வேண்டுகோள்:** குறிப்பிட்ட ஒரு செயலில் அல்லது நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு நோயாளிக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குமாறு சிகிச்சையணியினால் கோரப்படும் ஒரு நிபந்தனை. எங்கே, எப்போது, எவருடன் இந்நிபந்தனை பயன்படுத்தப்படும் என்பதை அக் கோரிக்கை குறிப்பிட வேண்டும். ORB நிபந்தனைக்கான கோரிக்கை குறிப்பிட்ட செயற்பாடு அல்லது நிகழ்வு நடைபெற இரண்டு வேலை நாட்களுக்கு முன்னதாக பொறுப்பான நபருக்கு அனுப்பப்படும்.

**ஒன்ராறியோ மீளாய்வுச் சபை (ORB)**: தீர்ப்பு ஒன்றுடன் இருக்கும் ஒரு நோயாளி ''பொது மக்களின் பாதுகாப்பிற்குக் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக'' இருக்கின்றாரா என்பதைத் தீர்மானிப்பதற்காக, சபை உறுப்பினர்கள் ஆண்டுக்கு ஒரு முறை விசாரணைகள் நடாத்துவார்கள். ஆம் என்றால்,ORB ஒரு ''தடுப்பு உத்தரவு'' அல்லது ஒரு ''நிபந்தனையுடன்கூடிய தண்டனை விலக்கு'' வழங்கமுடியும்.இல்லை என்றால்,''முழுமையான தண்டனை விலக்கு'' வழங்கப்பட வேண்டும்.ORB தீர்ப்புகளைத் தயாரிக்கும்போது நோயாளியின் ஆபத்து நிலை, இருக்கும் இடம் (அதாவது, எந்த மருத்துவமனை), பாதுகாப்பு நிலை ஆகியவற்றைக் கருத்திற்கொள்கின்றது. எந்த விளைவு தனிநபரின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றதென்பதையும் பொது மக்களைப் பாதுகாக்கின்றனென்பதையும் சபை தீர்மானிக்க வேண்டும். NCR நபருக்கு, அவளால்/அவனால் பொதுமக்களது பாதுகாப்புக்குக் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல் இல்லை என்று காட்டவேண்டிய எந்தவொரு சட்டப்பழுவும் ஒருபோதும் இல்லை (Winkov.BC).

**ORB நிபந்தனைக் கோரிக்கை:** ஒன்ராறியோ மீளாய்வுச் சபைத் தடயவியல் நோயாளியின் தீா்ப்பில் விபரிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு படிப்படியான செயலாக்கத்திற்குத் துணைசெய்யும் பொருட்டு OntarioShores இனால் உருவாக்கப்பட்ட ஒரு படிவம். சிகிச்சை அணிகள் நோயாளியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதுடன், என்ன கண்காணிப்பு நிபந்தனை/தரம் பொருத்தமானது எனத் தீா்மானித்து ஒரு பரிந்துரைப்பை பொறுப்பான நபருக்கு அங்கீகாரத்துக்காக அனுப்புகின்றனா். பொறுப்பான நபருக்கு அனுப்ப முன்னா் எல்லாப் படிவங்களும் சிகிச்சையளிக்கும் உளநல மருத்துவரினால் கையொப்பமிடப்படவேண்டும். பொறுப்பான நபரினால் அங்கீகரிக்கப்படும் வரை எந்தவொரு நிபந்தனையையும் நடைமுறைப்படுத்த முடியாது.

**நிலையான கட்டளை:** நிபந்தனை **தரநிலைகள் 1 தொடக்கம் 13 வரை** பாவிப்பதற்கு நோயாளிக்குத் தொடா்ச்சியான அங்கீகாரம் வழங்குமாறு அணியினால் கோரப்படும் ஒரு நிபந்தனைக் கட்டளை. நிலையான கட்டளைகளுக்கு ஒரு ஆரம்பத் திகதி உண்டு ஆனால் உறுதிப்படுத்தப்பட்ட முடிவுத் திகதி இருக்கமாட்டாது. அத்துடன் எங்கே, எப்போது, எவருடன் அந்த நிபந்தனை பயன்படுத்தப்படும் என்பதைக் குறிப்பிடவேண்டும். ORB நிபந்தனைக்கான கோரிக்கை எப்போது பயன்படத் தொடங்கும் என எதிா்பாா்க்கப்படுவதற்கு இரண்டு வேலை நாட்களுக்கு முன்னராக பொறுப்பான நபருக்கு அனுப்பிவைக்கப்படும்.

**நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்படத் தகுதியற்றவா்:** குற்றம்சாட்டப்பட்டவா் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்படத் தகுதியற்றவா் எனக் காணப்படுகிறாா். ஏனெனில் குற்றம்புரிந்த நபா் தீா்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னா் விசாரணைகளின் எந்தக் கட்டத்திலும் வழங்கறிஞரை ஒழுங்குசெய்ய முடியாதிருக்கின்றாா் மற்றும்/அல்லது விசாரணைகளின் இயல்பை, நோக்கத்தை அல்லது பின்விளைவுகளைப் புரிந்துகொள்ளமுடியாதிருக்கின்றாா்.

**Winkov.BritishColumbia:** NCR நபருக்கு, அவளால்/அவனால் பொதுமக்களுக்குக் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல் இல்லை என்று காட்டவேண்டிய எந்தவொரு சட்டப்பழுவும் ஒருபோதும் இல்லை(Winkov.BC).

**நிபந்தனைகளை நிறுத்திவைத்திருத்தல்:** நோயாளி அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனையைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் அவன் அல்லது அவள் நிபந்தனையின் ஒரு விதிமுறையை மீறிவிட்டான்/மீறிவிட்டாள் அல்லது அவா்களது மன நிலை ஒரு நிபந்தனையைப் பயன்படுத்துதல் நோயாளிக்கோ அல்லது சமூகத்துக்கோ பாதுகாப்பாக இருக்கமாட்டாது எனக் காட்டுகின்றது.